[Sri B. K. Linga Gowder] [12th July 1957

this difference that he has more powers and responsibilities ever enjoyed by his predecessors in the pre-Independence days. The present-day Collector is in charge of not only routine administration like maintenance of law and order and collection of land revenue but also all the nation-building activities. He is in charge of Prohibition, Harijan Welfare, Community Development, Road Transport, Planning and other miscellaneous activities. I do not think the Collector, however capable, could function in all these roles, even assuming that he is able to go through all his routine activities. This question remains. How to enthuse the people to give their co-operation and to teach them that they are partners in the Administration? So, I feel that it is necessary that we should have some non-officials associated with the district administration, as we have such association of non-officials at higher levels. The Planning Commission has been considering how best reforms in the Administration at the district level could be brought about. I feel that it is the duty of the State Government to initiate such reforms. If they do not, there will be a big gulf between the Government and the people and the common man will have to understand the policy of the Government only as interpreted by the officials. My suggestion, in the last analysis, means effective decentralization of administration at all levels which is vital for building up our country from below.

Before I conclude, I wish to invite the attention of the Government to one peculiar problem facing our district. I refer to the plight of the non-gazetted officers with all their troubles. They have to work under the rigours of the climate of the Nilgiris. I wish to urge the Government to give them some special enhanced allowance either as hill allowance or as compensatory allowance.

Sri M. Anandan : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மாவட்ட மான்ய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து பேச விரும்புகிறேன். குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் முதலிய தாலூகாக்களில் இருக்கும் அதிகாரிகள் மக்களுடைய குறைகளை சரிவர கவனிப்பதில்லை. எங்கள் கச்சாபாளையம் மாயம்பாடி என்ற பகுதியில் ஏலக்காய், லவங்கம், இஞ்சி, சந்தனம், எலுமிச்சை போன்ற பலவிதமான பொருள்களும் விளைகின்றது. மலைமரங்களும், மூங்கில் இன்னும் அநேகவிதமான பொருள்களும் விளைகின்றன. இதை விளைவிக்கும் மலை சாதி மக்கள் இவற்றை விற்க சென்றால் அந்த ஊர் ஜமீன்தார் தான் கேட்கும் விலைக்கு பொருள்களைக் கொடுக்கும்படி வற்புறுத்துகிறார். கொடுக்காவிட்டால் இந்த ஏழை விவசாயிகளுக்கு ரூ. 100, 200 என்று அபராதம் போடுகிறார். அங்கு .விளையும் கடுக்காய் ஒரு மரக்காலுக்கு ரூ. 2 மதிப்பு உண்டு என்றால், அதை நாலு அணாவுக்கு கொடு என்கிறார். அப்படி கொடுக்கத் தவறினால் அங்கிருக்கும் மலையாள மக்கள் பயிரிட முடியாது என்று அந்த துரை மறுத்து விடுகிறார். இந்த குறையை கச்சாபாளையம் அஞ்சலில் இருக்கும் போலீஸ் அதிகாரிகளிடம் சொன்னாலும் அவை கவனிக்கப்படுவது இல்லை. என் தொகுதியில் 10,000 மலையாள மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான ரோட் கூட கிடையாது. வோட்டுப்போட வருவதும் இல்லை சங்கராபுரம் பிர்க்காவும் புதுபட்டு அஞ்சல், லக்கிநாய்கன்பட்டி, கொடினார், புளியங்கொட்டை மலையைச் சேர்ந்தது. அந்த கிராமங்களிலெல்லாம் சரியானபடி ரோடு இல்லாததால் மக்கள் வோட்டுப்போட வருவதில்லை. அவர்களுக்கு குடி தண்ணீர் கிணறு போன்ற வசதிகளை அதிகாரிகள் சரிவர கவனித்து செய்து கொடுப்பது